கீழ்பெரும்பாக்கம் துர்கை முத்துமாரியம்மன் கோயிலில் திருக்கல்யாண உற்சவம்



விழுப்புரம் கீழ்பெரும்பாக்கம் ஸ்ரீதுர்கை முத்துமாரியம்மன் கோயிலில் நடைபெற்ற திருக்கல்யாண உற்சவத்தில் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளிய அம்மன், சிவபெருமான்.

விழுப்புரம், அக்.22: விழுப்பரம் கீழ்பெரும்பாக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீதுர்கை முத்துமாரியம்மன் கோயிலில் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. இதில், திரளான பக்தர்கள் பங்கேற்று, அம்மனை தரிசனம் செய்தனர்.

இந்தக் கோயிலில் நிகழாண்டு நவராத்திரி உற்சவம் கடந்த 10-ஆம் தேதி கலச பூஜையுடன் தொடங்கியது. தொடர்ந்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்காரத்தில் அம்மன் எழுந்தருளி, பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

நவராத்திரி உற்சவத்தின் நிறைவு நாளான புதன்கிழமை யாகம் வளர்த்து, வேதமந்திரங்கள் முழங்க திருக்கல்யாண வைபவம் நடத்தப்பட்டது. இதையொட்டி, சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீதுர்கை முத்துமாரியம்மனும், சிவபெருமானும் எழுந்தருளிய பின்னர், மாலை மாற்றிக்கொள்ளும் நிகழ்வும், அதைத் தொடர்ந்து மாங்கல்யம் சாற்று முறையும் நடைபெற்றது.

தொடர்ந்து, பக்தர்கள் அம்மனுக்கு சீர்வரிசை செய்தும், வளையல், குங்குமம், மாங்கல்ய கயிறு, மலர்கள் ஆகியவற்றை வைத்து பூஜை செய்தும் வழிபாடு நடத்தினர். திருக்கல்யாண உற்சவத்தில் கீழ்பெரும்பாக்கம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், பக்தர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

கள்ளக்குறிச்சி: ஆட்சியரகம் முன் அதிமுக எம்எல்ஏ தர்னா



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் தனது ஆதரவாளர்களுடன் தர்னாவில் ஈடுபட்ட சங்கராபுரம் தொகுதி எம்எல்ஏ ராகேஷிடம் பேச்சுவார்த்தை நடத்திய மாவட்ட வருவாய் அலுவலர் ஜீவா.

கள்ளக்குறிச்சி, அக்.22: கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட ஊராட்சிச் செயலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் தன்னுடனான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க திட்ட இயக்குநர் தடை விதித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சங்கராபுரம் தொகுதி அதிமுக எம்எல்ஏ ராகேஷ் மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயில் முன் ஆதரவாளர்களுடன் வியாழக்கிழமை தர்னாவில் ஈடுபட்டார்.

அப்போது, அவர் கூறியதாவது: எனது சங்கராபுரம் சட்டப் பேரவைத் தொகுதிக்குள்பட்ட 21 கிராமங்கள் கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்கு உள்ளடங்கியதாகும். இந்தப் பகுதிகளைச் சேர்ந்த ஊராட்சிச் செயலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டம் நடத்த வியாழக்கிழமை காலை திட்டமிட்டிருந்தேன்.

இந்த கூட்டத்தை நடத்த அனுமதிக்கக் கூடாது என கள்ளக்குறிச்சி திட்ட இயக்குநர் (ஊராட்சிகள்) ரமேஷ் குமார் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதாகவும், அதன்படி ஊராட்சிச் செயலர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம் என வட்டார வளர்ச்சி அலுவலர் அறிவித்ததாகவும் கூறப்படுகிறது. மக்கள் பிரச்னையை அதிகாரிகளிடம் சொல்ல ஏன் அனுமதி மறுக்கிறார்கள்? இதுகுறித்து மாவட்ட ஆட்சியரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர் சட்டப் பேரவை உறுப்பினர்கள் அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்த அனுமதி இல்லை எனக் கூறினார். இதன் காரணமாகவே, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் அமர்ந்து தர்னாவில் ஈடுபட்டுள்ளோம் என்றார்.

இதனிடையே, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்த மாவட்ட வருவாய் அலுவலர் ஜீவா, எம்எல்ஏவிடம் பேச்சுவார்த்தை நடத்தி மாவட்ட வருவாய் அலுவலரின் அறைக்கு அழைத்துச் சென்றார். அப்போது, வியாழக்கிழமை பிற்பகலில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்திக்கொள்ளலாம் என எம்எல்ஏவுக்கு அனுமதி அளிக்கப்பட்டதால், தர்னா போராட்டம் கைவிடப்பட்டது.

திருக்கோவிலூரில் ராஜராஜ சோழனுக்கு மணிமண்டபம் அமைக்க வலியுறுத்தல்



திருக்கோவிலூரில் நடைபெற்ற மாமன்னர் ராஜராஜசோழனின் 1041-ஆம் ஆண்டு சதய விழாவில், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கிய சு.பழனிச்சாமி எம்எல்ஏ.

விழுப்புரம், அக்.22: கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூரில் மாமன்னர் ராஜராஜ சோழனுக்கு திருவுருவச் சிலையும், மணிமண்டபமும் அமைக்க வேண்டும் என்று, அங்கு நடைபெற்ற சதய விழாவில் எம்எல்ஏவிடம் வலியுறுத்தப்பட்டது.

திருக்கோவிலூரிலுள்ள ஸ்ரீவீரட்டானேசுவரர் கோயில் வளாகத்தில் மாமன்னர் ராஜராஜசோழனின் 1041-ஆம் ஆண்டு சதய விழா கோவல் தமிழ்ச் சங்கம் சார்பில் புதன்கிழமை மாலை நடைபெற்றது. இந்த விழாவுக்கு தமிழ்ச் சங்கத் தலைவர் சிங்கார உதியன் தலைமை வகித்தார். தொல்லியல் துறை உதவி இயக்குநர் பொ.கோ.லோகநாதன், கோயில் செயல் அலுவலர் ராஜாத்தி, ரோட்டரி சங்கத்தின் முன்னாள் செயலர் செந்தில்குமார் முன்னிலை வகித்தனர்.

தமிழ்ச் சங்கத்தின் செயலர் பாரதி மணாளன் வரவேற்புரையையும், துணைத் தலைவர் பா.கார்த்திகேயன் தொடக்கவுரையையும் வழங்கிப் பேசினர். திருக்கோவிலூர் எம்எல்ஏ சு.பழனிச்சாமி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று பேசினார்.

தொடர்ந்து, ராஜராஜசோழனின் புகழைப் பரப்பி வரும் 7 தமிழறிஞர்களுக்கு மாமன்னர் ராஜராஜன் விருதையும், பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற 141 மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள், பாராட்டுப் பட்டயங்களையும் எம்எல்ஏ வழங்கினார்.

ராஜராஜசோழனுக்கு திருக்கோவிலூரில் அரசு சார்பில் விழா நடத்த வேண்டும். மணிமண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, கோவல் தமிழ்ச் சங்கம் சார்பில் எம்எல்ஏவிடம் வலியுறுத்தப்பட்டது. இக்கோரிக்கையை அரசிடம் வலியுறுத்தி, மணிமண்டபமும், திருவுருவச் சிலையையும் அமைத்துத் தரவும், அரசு சார்பில் சதய விழா கொண்டாட அனுமதி பெற்றுத் தருவதாகவும் எம்எல்ஏ பழனிச்சாமி உறுதியளித்தார்.

விழாவில் பங்கேற்ற நாட்டியக் கலைஞர்களுக்கு திருக்கோவிலூர் பண்பாட்டுக் கழகத் தலைவர் தே.முருகன் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். முன்னதாக நடைபெற்ற திருமுறை இசையரங்கத்தில் புலவர்கள் தேவ ஆசைத்தம்பி, தங்க விசுவநாதன், பால்வண்ணசுந்தரம் ஆகியோர் பங்கேற்றனர்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற புகழரங்கத்துக்கு கா.பி.சுப்பிரமணியன் தலைமை வகித்தார். இதில், தமிழ்நாடு கலை, இலக்கிய பெருமன்ற மாவட்டத் தலைவர் மு.கலியபெருமாள், கம்பன் கழகச் செயலர் வைத்திமுருகன், இளம் அழகர், அருணகிரி சிதம்பரநாதன், அன்புநிலவன், தொடக்கக் கல்வி அலுவலர் தமிழ்ச்செல்வன், தமிழ்ச் சங்கப் பொருளாளர் குருராசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அக்.28-இல் கடன் விழிப்புணர்வு முகாம்

கள்ளக்குறிச்சி, அக்.22: கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டத்தில் கடன் விழிப்புணர்வு முகாம் பகண்டைகூட்டுச்சாலையில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் வரும் 28-ஆம் தேதி நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது: மாவட்ட தொழில் மையம் சார்பில், வாணாபுரம் வட்டத்தில் பகண்டை கூட்டுச் சாலையில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வரும் 28-ஆம் தேதி காலை 10 மணியளவில் கடன் விழிப்புணர்வு முகாம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில்முனைவோர் தங்களது புகைப்படம், பான், ஆதார், ரேஷன் அட்டைகள், பள்ளிக் கல்விச் சான்றிதழ் மற்றும் விலைப்புள்ளி போன்ற ஆவணங்களுடன் கலந்துகொண்டு, வியாபாரம், சேவைத்தொழில் மற்றும் உற்பத்தி தொழில் ஆகிய ஏதேனும் ஒரு தொழிலில் விண்ணப்பித்து வங்கிக்கடன் பெற்று பயன்பெறலாம்.

மேலும், விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், 4-ஆவது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வீரசோழபுரம், கள்ளக்குறிச்சி - 606202 என்ற அலுவலகத்தை நேரடியாகவோ அல்லது 04151 - 294057 என்ற எண்ணிலோ தொடர்புகொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா தெரிவித்துள்ளார்.

உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு

விழுப்புரம், அக்.22: கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா வியாழக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உளுந்தூர்பேட்டை ஒன்றியம், வெள்ளையூர் கிராமத்தில் வளர்ச்சியடைந்த பாரதம் - கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் (விபி-ஜி ராம்-ஜி) மேற்கொள்ளப்பட்டு வரும் வாய்க்கால் அமைக்கும் பணி, உளுந்தூர்பேட்டை ஏரி தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா பார்வையிட்டு, பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இதைத் தொடர்ந்து, உளுந்தூர்பேட்டை நியாயவிலைக் கடையைப் பார்வையிட்ட ஆட்சியர் பத்மஜா, அங்கு வழங்கப்படும் பொருள்களின் தரம், இருப்பு நிலவரம் உள்ளிட்ட விவரங்களைக் கேட்டறிந்தார். மேலும், பிடாகத்திலுள்ள சமூகநீதி பள்ளி மாணவிகள் விடுதிக்குச் சென்ற ஆட்சியர், அங்கு வழங்கப்படும் உணவுப் பொருள்களின் தரம், சமையலறை, குடிநீர் வசதி உள்ளிட்டவை குறித்தும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, உளுந்தூர்பேட்டையில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் மானிய நிதித் திட்டத்தின் கீழ், ரூ.6 கோடியில் கட்டப்பட்டு வரும் வட்டார வளர்ச்சி அலுவலகக் கட்டுமானப் பணிகளையும், உளுந்தூர்பேட்டையில் ரூ.16.85 கோடியில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்ட ஆட்சியர் ஜெ.இ.பத்மஜா, பணிகளை குறிப்பிட்ட காலத்துக்குள் முடிக்க வேண்டும் என்று அலுவலர்களை அறிவுறுத்தினார்.

பொது அறிவிப்புக்கான திருத்தம் - ஆறாவது மின்-ஏலம், நாள் 29.09.2026

IVRCL லிமிடெட் கலைப்பு நடவடிக்கையின் கீழ்
திவால் மற்றும் நொடிப்புநிலை சட்டம், 2016-இன் படி
மின்னஞ்சல் முகவரி: ivrcl.liquidation@gmail.com, www.ivrcl.com

திருத்தம்
திவால் மற்றும் நொடிப்புநிலை சட்டம், 2016-இன் கீழ் சொத்துகள் விற்பனை

கிழ்க்கையொப்பமிட்டவரால் 29.09.2026 அன்று மின்-ஏலம் மூலம் IVRCL லிமிடெட் விற்பனைக்காக வெளியிடப்பட்ட ஏல விற்பனை அறிவிப்பு தொடர்பாக, அந்தச் செயல்முறையின் காலக்கெடு பின்வருமாறு திருத்தப்படுகிறது. இந்த விற்பனையானது, கீழே கையொப்பமிட்டவரால் https://ibbi.baanknet.com/eauction-ibbi/home என்ற இணையதளத்தில் உள்ள மின்-ஏலத் தளம் வழியாக நடத்தப்படும்.

விற்பனையின் சுருக்கமான விவரங்கள் பின்வருமாறு:

விபரம்	ஏல அறிவிப்பின்படி	திருத்தப்பட்டபடி
பிரிவு A - இயங்கிவரும் ஒரு நிறுவனமாக பெருநிறுவனக் கடன்தாரர் விற்பனை **சொத்துத் தொகுப்பு 1:** இயங்கிவரும் ஒரு நிறுவனமாக பெருநிறுவனக் கடன்தாரர் விற்பனை **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ள நிலையில்", "உள்ளது என்னவோ அது" மற்றும் "எந்தப் பொறுப்பேற்பும் இன்றி"** என்ற அடிப்படையில்	23.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை	30.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை
பிரிவு B - பெருநிறுவனக் கடன்தாரர் முதலீடுகளின் விற்பனை **(பிரிவு A-இன் கீழ் ஏலத்துக்கு எந்த ஏல புள்ளியும் பெறப்படாத பட்சத்தில்)** **சொத்துத் தொகுப்பு 2:** பெருநிறுவனக் கடன்தாரர் சொத்துக்களின் ஒரு பகுதியாக இருக்கும் சேலம் டோல்வேஸ் லிமிடெட் (SPV) நிறுவனத்தில் உள்ள பெருநிறுவனக் கடன்தாரர் முதலீடுகளின் விற்பனை **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ள நிலையில்", "உள்ளது என்னவோ அது" மற்றும் "எந்தப் பொறுப்பேற்பும் இன்றி"** என்ற அடிப்படையில் **சொத்துத் தொகுப்பு 3:** பெருநிறுவனக் கடன்தாரர் சொத்துக்களின் ஒரு பகுதியாக இருக்கும் குமாரபாளையம் டோல்வேஸ் (SPV) லிமிடெட்டில் உள்ள பெருநிறுவனக் கடன்தாரர் பங்குகளின் விற்பனை **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ள நிலையில்", "உள்ளது என்னவோ அது" மற்றும் "எந்தப் பொறுப்பேற்பும் இன்றி"** என்ற அடிப்படையில்	23.10.2026 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை	30.10.2026 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை
பிரிவு C - பெருநிறுவனக் கடன்தாரரர் முதன்மை அல்லாத சொத்துக்களின் விற்பனை **(பிரிவு A-இன் கீழ் ஏலத்துக்கு எந்த ஏல புள்ளியும் பெறப்படாத பட்சத்தில்)** **சொத்துத் தொகுப்பு 4:** "முதன்மை அல்லாத சொத்துக்கள் பகுதி 1"-இல் மேலும் பட்டியலிடப்பட்டுள்ளபடி, பெருநிறுவனக் கடன்தாரரர் முதன்மை அல்லாத சொத்துக்களின் பகுதியாக இருக்கும் தனிப்பட்ட சொத்து(களின்) விற்பனை **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ள நிலையில்", "உள்ளது என்னவோ அது" மற்றும் "எந்தப் பொறுப்பேற்பும் இன்றி"** என்ற அடிப்படையில் **சொத்து தொகுப்பு 5** ; "முதன்மை அல்லாத சொத்துகள் பகுதி 2"-இல் மேலும் பட்டியலிடப்பட்டுள்ளபடி, இந்தியா முழுவதுமான ஸ்கிராப்புகள் பெருநிறுவனக் கடன்தாரர் முதன்மை அல்லாத சொத்துக்களின் ஒரு பகுதி என்ற முறையில் விற்பனை **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ள நிலையில்" உள்ளது என்னவோ அது மற்றும் "எந்தப் பொறுப்பேற்பும் இல்லை"** என்ற அடிப்படையில்	23.10.2026 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை	30.10.2026 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை
ஆவணங்கள் மற்றும் டேவணித் தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	21.10.2026 மாலை 05:00 மணிக்கு முன்.	28.10.2026 மாலை 05:00 மணிக்கு முன்.
இடத்துக்கு நேரில் செல்லல்	29.09.2026 முதல் 21.10.2026 வரை **காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை.**	28.10.2026 வரை **காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை.**

தேதி: அக்டோபர் 23, 2026
இடம்: ஹைதராபாத்

புருஷோத்தம் பெஹோரா
IVRCL லிமிடெட்டின் கலைப்பு அலுவலர்
பதிவு எண். IBBI/IPA-002/IP-N00940/2019-2020/12993
மின்னஞ்சல் முகவரி - ivrcl.liquidation@gmail.com

SBI
பாரத ஸ்டேட் வங்கி
மத்திய பணியமர்த்தம் மற்றும் பதவி உயர்வுத் துறை
கார்போரேட் மையம், மும்பை
தொலைபேசி: 022-22820427

கியூ ஆர்-ஐ ஸ்கேன் செய்து விண்ணப்பிக்கவும்.

குறிப்பிட்ட கால ஒப்பந்த அடிப்படையில் சிறப்புப் பிரிவு அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல்

பின்வரும் பணியிடங்களுக்கு, தகுதியுடைய இந்தியக் குடிமக்களிடமிருந்து, குறிப்பிட்ட கால ஒப்பந்த அடிப்படையிலான வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

விளம்பர எண் CRPD/SCO/2026-27/30

பதவியின் பெயர்	காலிப் பணியிடங்கள்	30.09.2026 அன்றுள்ள வயது (ஆண்டுகள்) குறைந்தபட்சம்	அதிகபட்சம்
பொது மேலாளர் மற்றும் தலைமை செயற்கை நுண்ணறிவு அதிகாரி	1	40	55
துணைப் பொது மேலாளர் (இடர் மற்றும் செயல்பாட்டுப் பகுப்பாய்வு)	1	35	50
(செயற்கை நுண்ணறிவு ஆளுகை மற்றும் இணக்கம்)	1		
துணைப் பொது மேலாளர் (தரவுப் பொறியியல், மாதிரிப் பயன்பாட்டு மேம்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவு செயல்பாடுகள்)	1		
செயற்கை நுண்ணறிவுத் தீர்வு வடிவமைப்பாளர்	1	30	45
நிறுவன செயற்கை நுண்ணறிவு வடிவமைப்பாளர்	1		

இணையவழி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க மற்றும் இணையவழி விண்ணப்பக் கட்டணம் செலுத்த, தகுதி வரம்பு (வயது, தகுதி, அனுபவம், முந்தைய பணி போன்ற பிற விவரங்கள்), காலிப் பணியிடங்களின் விவரங்கள், தேவையான கட்டணம் மற்றும் பிற விவரங்கள் அறிய, வங்கியின் **https://sbi.bank.in/web/careers/current-openings** வலைதளத்தைப் பார்க்கவும். விண்ணப்பிக்கும் முன்னரும், கட்டணம் செலுத்தும் முன்னரும் தங்கள் தகுதி மற்றும் பிற விவரங்களை உறுதி செய்து கொள்ள விரிவான விளம்பரத்தைப் பார்க்கவும். ஏதேனும் சந்தேகங்களுக்கு, வங்கியின் அதிகாரப்பூர்வ **(https://bank.sbi/web/careers/post-your-query)** வலைதளத்திலுள்ள **"CONTACT US" —> "Post Your Query"** என்ற இணைப்பின் மூலம் எங்களுக்கு எழுதவும்.

- **இணையவழி விண்ணப்பங்கள் பதிவு செய்ய மற்றும் கட்டணம் செலுத்தவேண்டிய தேதி: 19.10.2026-லிருந்து 09.11.2026 வரை.**

இடம்: மும்பை
தேதி : 19.10.2026

பொது மேலாளர் (ஆர்பி மற்றும் பிஎம்)

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் 2, எண் 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை-2. தொ.பே: 044-42995000
தொலைநகல்: 044-42995050 www.equitas.bank.in

தங்க நகை ஏல விற்பனை அறிவிப்பு

எங்களது வங்கி கிளைகளில் நகைக்கடன் வாங்கி சரிவர திருப்பிச் செலுத்தாத அனைவருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிப்பு. கடன்களை திருப்பச் செலுத்த வேண்டி பலமுறை நோட்டீஸ் அனுப்பியும், கடனை திருப்பிச் செலுத்தாதவர்களின், கீழே குறிப்பிடப்பட்ட கடன் எண்கள் நகைகளை கீழ்கண்ட கிளைகளில் குறிப்பிட்ட தேதியில் & நேரத்தில் பகிரங்க ஏலம் விடப்படும் என்று இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. நேரடி ஏலம் தோல்வியடைந்தால் 27.10.26 அன்று மின்னணு ஏலம் (E-Auction) நடத்தப்படும்.

தேதி: 26.10.2026 நேரம்: காலை 10.00 மணி
இடம்: எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

நகரம்	கிளை	கடன் எண்கள்
விழுப்புரம்	விழுப்புரம்	70001327126 9/GL1001227649
விழுப்புரம்	வளவனூர்	70001381205 0/GL1001326266
சிதம்பரம்	வண்டிகேட்	70001323537 7/GL1001223485
கடலூர்	காட்டுமன்னார் கோயில்	700013269170/GL1001227574 700013249402/GL1001225198 700013214460/GL1001220553 700013237268/GL1001223785

குறிப்பு: 1. தங்கள் நகைகளை மீட்க நினைக்கும் வாடிக்கையாளர்கள் மொத்த நிலுவைத் தொகையை அடகு வைக்கப்பட்ட வங்கி கிளைகளில் ஏலத்திற்கு முன் செலுத்தி, நகைகளை மீட்கலாம். 2. ஏலம் எடுக்க விரும்புபவர்கள் அடையாள சான்று, வருமான வரி PAN கார்டு, GST எண் (அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / கம்பெனிகள்) அளிக்க வேண்டும். 3. ரூ.1,00,000 முன் தொகையாக (EMD) ஏலம் ஆரம்பிக்கும் முன் செலுத்த வேண்டும்.

இடம்: விழுப்புரம்
தேதி : 23 அக்டோபர் 2026

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டுக்காக
அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

TAMIL NADU STATE AIDS CONTROL SOCIETY
417, Pantheon Road, Egmore, Chennai
Telephone No.044-28190467, 28190891
(http://www.tnsacs.in)

Invitation for Expression of Interest (EOI)
Ref.No. 01399/CST/TANSACS/CSC/2026
Applications from NGOs/CBOs for **"Selection of Care and Support Centers in five regions"** are invited on or before **12.11.2026 at 05.00 P.M.**
The format of the application, letter of interest, criteria for selection and other related details are available in our website **http://www.tnsacs.in**

Project Director
DIPR / 3130 / TENDER / 2026 TANSACS

Can Fin Homes Ltd (Sponsor: CANARA BANK)
பதிவு அலுவலகம்: எண்.29/1, 1வது தளம், ஸ்ரீ MN கிருஷ்ணா ராவ் சாலை, லால்பாக் மேற்கு கேட் அருகில், பசவங்குடி, பெங்களூரு - 560 004
இணையதளம்: www.canfinhomes.com

அலுவலக இடம் தேவை

கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட், ஒரு வீட்டுக்கடன் நிதி நிறுவனத்திற்கு கீழே குறிப்பிட்டுள்ள இடத்திற்கு 1200 சதுர அடி முதல் 1500 சதுர அடி வரை தரை தளம் / முதல் தளம் / இரண்டாவது தளத்தில் 5 முதல் 10 ஆண்டு வரை குத்தகைக்கு இடம் தேவை.

வ.எ.	இடம்	தொடர்புக்கொள்ள வேண்டிய நபர் / பதவி	தொடர்புக்கொள்ள கைபேசி எண். / அலுவலக எண்
1	பாண்டிச்சேரி	மணிகண்டன் J முதன்மை மேலாளர்	76250 79109

விருப்பமுள்ள இடத்தின் உரிமையாளர்கள் தங்களது விலைப்புள்ளிகளை சீலிட்ட உறையில் 29.10.2026 அன்று அல்லது அதற்கு முன்பு கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட் எண்.115, 1வது தளம், வைசால் தெரு, பாண்டிச்சேரி - 605 001 என்ற முகவரிக்கு எங்களது இணையதளமான www.canfinhomes.com -ல் எங்களது உரிய படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
இடமானது அனைத்து வசதிகளுடன் கூடிய உடனடியாக குடியேறுவதற்கு தகுதியானதாக இருக்க வேண்டும், இடைதரகர்களிடமிருந்து பெறப்படும் விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எந்த ஒரு விலைப்புள்ளியையும் எந்த காரணமும் இல்லாமல் ஏற்கவோ அல்லது விலைப்புள்ளிகளையும் நிராகரிக்கவோ கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட் -க்கு உரிமை உண்டு. எந்த வகையிலான கேன்வாசிங் (ஆதரவு கோருதல் / தொடர்பு முயற்சி) மேற்கொள்ளப்பட்டாலும், அந்த முன்மொழிவு தகுதி நீக்கம் செய்யப்படும். இடைதரகர்களின் கமிஷன்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

தேதி: 23.10.2026, இடம்: பாண்டிச்சேரி

ஒப்பம்/-
கிளை மேலாளர்

கூட்டுறவே! நாட்டுயர்வு!!

எப்.வி.107 விழுப்புரம் கல்வி மாவட்ட பள்ளிக்கல்வித்துறைப் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கம் லிட்.,
சுதாகர் நகர் மெயின் ரோடு, சாணக்யா அகாடமி மாடியில், விழுப்புரம்.

பேரவைக்கூட்ட அறிவிப்பு

அன்புடையீர் !

நமது சங்கத்தின் 2024-2025-ம் ஆண்டுக்கான பேரவைக் கூட்டம் **2026-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் தேதி (02.11.2026) திங்கட்கிழமை மாலை 04.30 மணியளவில் நமது சங்க கட்டிட வளாகத்தில்** நடைபெற உள்ளது. அவ்வமயம் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவு செய்வதற்காக சங்க அங்கத்தினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு பேரவைக்கூட்டத்தினை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கூட்ட பொருள்கள்

1. சங்கத்தின் 2024-2025-ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கையை வாசித்து அங்கீகரிக்கும் விஷயம்.
2. சங்கத்தின் 2024-2025-ம் ஆண்டில் நடைபெற்ற வரவு-செலவு இனங்களை வாசித்து அங்கீகரிக்கும் விஷயம்.
3. சங்கத்தின் 2024-2025-ம் ஆண்டு இறுதி தணிக்கை அறிக்கையின்படி ஈட்டிய நிகர இலாபத்தினை சங்க துணை விதிகளின் படி பிரிவினை செய்தல்.
4. 01.04.2026 முதல் 30.09.2026 வரை வரவு-செலவுகளையும் மற்றும் 01.10.2026 முதல் 31.03.2027-ம் ஆண்டிற்கான உத்தேச வரவு-செலவு திட்டங்களையும் (பட்ஜெட்) ஏற்று வாசித்து அங்கீகரித்தல்.
5. "ஆ" வகுப்பு அங்கத்தினர்கள் அனைவரையும் "அ" வகுப்பு அங்கத்தினர்களாக ஏற்றுக் கொண்டு அங்கீகரித்தல்.
6. சங்க துணைவிதி எண்.1-.ஐ திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் துணை விதி எண்.61 புதியதாக ஏற்படுத்துதல்.
7. சங்க பணியாளர்களுக்கான பணி நிலைத்திறன் நிர்ணயம் செய்திட சிறப்பு துணைவிதி எண் ஏற்படுத்துதல்.

பா.சம்பத்
செயலாளர் (கூடுதல் பொறுப்பு)

சு.நாகலட்சுமி
கூட்டுறவு சார்பதிவாளர் / செயலாட்சியர்

குறிப்பு :

1. 03.11.2026 அன்று பங்கு ஈவுத்தொகை அவரவர் வங்கி சேமிப்பு கணக்கில் ECS மூலம் வரவு வைக்கப்படும். வங்கி சேமிப்பு கணக்கு எண் வழங்காதவர்கள் உடன் சங்கத்தில் பாஸ்புக் முதல் பக்க நகல் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. தவணை தவறிய அங்கத்தினர்களுக்கு அவரவர் கடன் கணக்கில் வரவு வைக்கப்படும்.

யூனியன் பேங்க் ஆப் இந்தியா **Union Bank of India**
இந்திய அரசு உடைமையானது A Government of India Undertaking

பிராந்திய அலுவலகம் : திருச்சிராப்பள்ளி
எண்.11 B/2 மற்றும் B/3 இரண்டாவது தளம், ஆனந்தா கிராண்ட், சாஸ்திரி ரோடு, தென்னூர், திருச்சிராப்பள்ளி – 620017.

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) / 9 (1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல 15 நாள் விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் அடமானப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, **யூனியன் பேங்க் ஆப் இந்தியா** வின் (கடன் வழங்கியவர்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டது (கீழே கண்ட விபரப்படி), கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி அன்று விற்பனை செய்யப்படுகிறது. சொத்திற்கான குறைந்தபட்ச விலை மற்றும் முன்வைப்புத் தொகை விபரம் கீழே பட்டியலில் தரப்பட்டுள்ள விபரப்படியாகும்.

கிளை : நெய்வேலி. கடன்தாரர்கள்/உத்தரவாதமளித்தவர்கள்/அடமானதாரர் பெயர் மற்றும் விலாசம் : கடன்தாரர் : M/s.வேல் ஃபார்ம்ஸ், 131/2, 131/2A மற்றும் 132/4, உத்தமசோழமங்கலம், பிச்சாவரம் ஏரி அருகில், சிதம்பரம் தாலூகா, கடலூர் மாவட்டம், **உரிமையாளர் : திருமதி.J.வனிதா**, க/பெ.ஜெய்வேல், எண்.90, அசோக் நகர் I, காந்தி நகர் அஞ்சல், வடக்குத்து, நெய்வேலி – 607 308, **உத்தரவாதமளித்தவர் : திரு.P.மகாதேவன்**, ஃப்ளாட் எண்.S–1, முன் புறம், மனை எண்.4, வள்ளியம்மாள் நகர், கங்கா நகர் அடுத்து, ஜாஃபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
நிலுவைத் தொகை : ரூ.52,93,343/– (ரூபாய் ஐம்பத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து முன்னூற்று நாற்பத்து மூன்று மட்டும்) 30.09.2026 தேதி அன்று + பின்வட்டி, பிற கட்டணங்களுடன்.
சொத்து விபரம் : சென்னை – 600 083, ஜாஃபர்கான்பேட்டை, கங்கா நகர் அடுத்து, வள்ளியம்மாள் நகர், மனை எண்.4ல் முன்புறம் அமைந்துள்ள குடியிருப்பு அடுக்குமாடி ஃப்ளாட் எண்.S–1 கட்டிடம் (495 சதுர அடி பிரிபடாத பங்கு) நிலம் P.மகாதேவனுக்குச் சொந்தமான சொத்து. இதன் **எல்லைகள் :** கிழக்கு : மனை எண்.3, மேற்கு : ரோடு மற்றும் மனை எண்.5, வடக்கு : ராகவா ரெட்டி நிலங்கள் உடன் 30 அடி அகல ரோடு, தெற்கு : 20 அடி அகல ரோடு. **சுவாதீன வகை : ஆக்கபூர்வ சுவாதீனம்.**
ரிசர்வ் விலை : ரூ.63,10,000/– முன்வைப்புத் தொகை : ரூ.6,31,000/– ஏல உயர்வு : ரூ.1,00,000/–
அறிவிப்பு தேதி : 12.10.2026. தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயர் மற்றும் தொடர்பு எண். : நெய்வேலி கிளை, கிளை மேலாளர் – திரு. ராஜ் மோகன், போன் எண்.94893 75357

ஏலத் தேதி / நேரம் : 11.11.2026 (புதன்கிழமை)
நண்பகல் 12.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை. 10 நிமிட தன்னிச்சையான அளவற்ற நீட்டிப்புடன்.

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு கீழே கண்டுள்ள வங்கியின் இணையதளத்தின் அல்லது இ–ஏலத்தின் முகவரின் இணையதளத்தின் லிங்க்கில் தொடர்பு கொள்ளவும். **டிஜிட்டல் கையொப்பம் கட்டாயமில்லை.**

https://www.unionbankofindia.bank.in/auction-property/viewauction-property.aspx | https://baanknet.com

செக்யூரிட்டி இன்ட்ரெஸ்ட் (என்போர்ஸ்மென்ட்) ஆக்ட் 2002 விதி 8(6)/விதி 9(1) –ன் கீழ் 15 நாட்கள் சட்டபூர்வ விற்பனை அறிவிப்பு
இந்த அறிவிப்பினை, செக்யூரிட்டி இன்ட்ரெஸ்ட் (என்போர்ஸ்மென்ட்) ஆக்ட் 2002 விதி 8(6)/விதி 9(1) –ன் கீழ் மேற்கண்ட ஈட்டுறுதிக்கடன் பெற்றுள்ள கடன்தாரர்/கள் மற்றும் உத்திரவாதம் அளித்தவர்/கள் ஆகியோருக்கு, மேற்கண்ட விற்பனையினை மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் நடத்தப்படும் என்பதற்கான அறிவிப்பாகவும் எடுத்துக் கொள்ளவும்.

இடம் : திருச்சிராப்பள்ளி

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி), யூனியன் பேங்க் ஆப் இந்தியா

IndusInd Bank **இன்டஸ் இண்ட் பேங்க் லிட்.,**
36, கோபதி நாராயணசாமி செட்டி (G.N.) ரோடு, T.நகர், சென்னை-600017.

பிற்சேர்க்கை IV-A [பார்க்க ஷரத்துகள் விதி 8(6)] அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையா சொத்துகளின் மின்-ஏல விற்பனை அறிவிப்பு-2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகளின் கீழானது.
இதன் மூலம் பரவலாக பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) அவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் ஈடு பெற்றுக் கடன் வழங்கியுள்ள வங்கியிடம் அடமானம்/ ஈடு வைக்கப்பட்டுள்ள இதன் கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமானச் சொத்துகள் அதிகாரபூர்வ அலுவலர், M/s இண்டஸ் இண்ட் பேங்க் லிட்., அவர்களால் **16.08.2024** அன்று வர்த்தக சொத்துக்காக நேரடி சுவாதீனம் எடுத்துக் கொள்ளப்பட்டன.
அந்தச் சொத்துகள், கடன்தாரர் **M/s லட்சுமி U** மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோரிடமிருந்து இன்டஸ்இண்ட் பேங்க் லிட்., நிறுவனத்துக்கு வரவேண்டிய 30.09.2026 அன்றுள்ளபடி கடன் பாக்கி **ரூ.1,26,51,090.98/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தாறு லட்சத்து ஐம்பத்து ஒரு ஆயிரத்து தொண்ணூறு மற்றும் தொண்ணூற்றெட்டு பைசா மட்டும்)** மற்றும் ஒப்பந்த விதத்தில் வட்டி, கட்டணங்கள், செலவுகள் ஆகியன சேர்த்து வசூலிப்பதற்காக "உள்ளது உள்ளவாறு, உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளது என்னவோ அது " எனும் அடிப்படையில் **06.11.2026** அன்று விற்கப்படும்.

கடன்தாரர் பெயர்	M/s லட்சுமி

திருக்கனூர் சார்பதிவு அலுவலகத்துக்கு உட்பட்ட 12.03.2015 நாளிட்ட ஆவண எண் 1494/2015 -இன்படி திருமதி லட்சுமி, க/பெ. திரு. உதய குமார் அவர்களின் சொத்து.
இன்றியமையாப் பகுதிகள் மற்றும் பாகங்கள் அனைத்துடனும் கூடிய ப்ளாட் எண் 02 இல் உள்ள நிலம் மற்றும் கட்டடம் பரப்பளவு: 700 சதுர அடி அமைப்பெற்ற கடாஸ்டர் எண்: 339/1/2, 339/2/2, 338/2/1, 338/2/2, 341/1, 341/2 RS எண் 113/3B/4 தற்போதைய RS எண் 113/3B/4A அமைவிடம்: திருவாண்டவர் கோயில் வருவாய் கிராமம், மண்ணாடிப்பட்டு கொம்யூன் பஞ்சாயத்து, பாண்டிச்சேரி மாவட்டம் எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** பாண்டிச்சேரி-விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலை **தெற்கு:** இந்திராணி அம்மாள் அவர்களின் சொத்து **கிழக்கு:** ஆறுமுகம் உடையார் அவர்களின் சொத்து **மேற்கு:** சதாசிவம் அவர்களின் சொத்து. இது பாண்டிச்சேரி பதிவு மாவட்டம் மற்றும் திருக்கனூர் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

குறைந்தபட்சக் கேட்பு விலை:	**ரூ.44,55,000/- (ரூபாய் நாற்பத்து நான்கு லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்)**
டேவணித் தொகை (EMD) தொகை (குறைந்தபட்சக் கேட்பு விலையில் 10%)	**ரூ.4,45,000/- (ரூபாய் நான்கு லட்சத்து நாற்பத்தைந்தாயிரம் மட்டும்)**
தெரிந்த வில்லங்கம், எதுவும் இருப்பின்	**வங்கியின் அறிவுக்கு எட்டியவரை, - இல்லை.**

சொத்து மீது முன்வைக்கப்படும் எந்தவொரு உரிமைகோரல்கள், ஏதேனும் இருந்தால் மற்றும் ஈடுபெற்றுக் கடன் கொடுத்த வங்கிக்கு தெரிந்த பிற நிலுவைகள் மதிப்புகள்: வங்கியின் உச்ச பட்ச அறிவுக்கு எட்டியவரை எதுவும் அறியப்படவில்லை .

சொத்து ஆய்வு	**30/10/2026 அன்று காலை 11.00 முதல் மாலை 12.00 மணி வரை**

தொடர்பு நபர் & தொலைபேசி எண் : திருமதி. A கிருஷ்ணகுமாரி (அதிகாரப்பூர்வ அலுவலர்) **அலைபேசி எண்: 9342332287, மின்னஞ்சல் முகவரி: krishnakumari.A@indusind.com, திரு. கமல் மிஸ்ரா அலைபேசி எண்: 9819820760**

விலைப்புள்ளி /ஏலப்புள்ளி சமர்ப்பிக்க இறுதி நாள்	**05/11/2026 அன்று மாலை 04.00 மணி வரை**

விலைப்புள்ளி திறக்கப்படும் நேரம் மற்றும் இடம் : மின்-ஏலம் /விலைகோரல் (https://www.bankeauctions.com) என்ற இணையத்தளம் மூலம் 06.11.2026 அன்று காலை 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை நடைபெறும்

ஏல அதிகரிப்பு	**ரூ.50,000/-**

விற்பனைக்கான விரிவான விற்பனை விதிமுறை & நிபந்தனைகள் அறிய, மின் ஏலம் /தொடர்புடைய சொத்து விற்பனை மற்றும் மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விலைப்புள்ளி சமர்ப்பித்தலுக்கு முன் அறியவேண்டிய விவரங்களுக்கு ஈடுபெற்றுக் கடன்வழங்கிய வங்கியின் இணையத்தளம் அஃதாவது- **https://www.indusind.com.** மேலும் விலைப் புள்ளிதாரர்கள் **https://www.bankeauctions.com** என்ற இணையத்தளத்தையும் பார்வையிடலாம் அல்லது சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ளுங்கள் M/s. C 1 இந்தியா பிரைவேட் லிமிடெட் , ஏலதாரர் உதவி எண்கள் 0124-4302020 / 21 /22, +91 7291981124 /1125 /1126; மின்னஞ்சல்:**support@bankeauctions.com** & திரு.பிரபாகரன், தொடர்பு எண் +91 74182 81709.

சர்ஃபாசி சட்டம் 2002-இன் கீழான சர்ஃபாசி விதிகள்-விதி 8, உபவிதி 6-க்கு இணங்க உங்கள் அனைவருக்கும் இது 15 நாள் அறிவிப்பாகவும் இது வழங்கப்படுகிறது.

நாள்:22.10.2026
இடம்:சென்னை

ஒம்/-
அதிகாரபூர்வ அலுவலர்
இன்டஸ் இண்ட் பேங்க் லிட்.,